## முற்போக்கு புத்தகக் கண்காட்சி:

# திராவிட அறிவியக்கத்தின் இன்னொரு அத்தியாயம்!

மனுஷ்ய புத்திரன்
தலைவர், சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு, மாநில ஆலோசகர், கழக தகவல் தொழில்நுட்ப அணி






**தி**ராவிட முன்னேற்றக் கழகம் எத்தனையோ மாற்றங்களுக்கும் புதுமைகளுக்கும் முன்னோடியாக இருந்ததுபோல இப்போது இளைஞரணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம் சார்பாக நவம்பர் 8 முதல் 16 வரை முற்போக்கு புத்தக கண்காட்சியை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடத்துகிறது. முற்போக்கு நூல்களை வெளியிடும் பதிப்பகங்களை மட்டும் கொண்டு ஒரு கண்காட்சி நடைபெறுவது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே இதுதான் முதன் முறை.

இந்தக் கண்காட்சில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75 ஆண்டு கால வரலாற்றை எண்பது ஆளுமைகளின் பார்வைகளின் வழியே வெளிப்படுத்தும் முத்தமிழறிஞர் பதிப்பகம் பதிப்பித்துள்ள “காலத்தின் நிறம்: கருப்பு சிவப்பு” தொகுப்பும் வெளியாகிறது. இரண்டு நாள் கருத்தரங்கையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரின் வழிகாட்டுதலில் மேற்கொண்டுவரும் அறிவுசார் தொடர் பரப்புரை பணிகளில் ஒன்றாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

முற்போக்கான இலக்கியங்களை, ஆய்வுகளை பதிப்பிப்பதில் முன்னணியில் இருக்கும் மொழிகளில் தமிழுக்கு தனித்துவமான இடமிருக்கிறது. திராவிட இயக்கம் தனது சமூக மாற்றத்திற்கான அரசியலுக்கு அறிவாயுதத்தையே முதன்மையான வழிமுறையாக மேற்கொண்டு வந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன்பே தந்தை பெரியாரும் அவரால் வழிநடத்தப்பட்ட பாரதிதாசன் உள்ளிட்ட மாபெரும் படைப்பாளிகளும் எழுத்தையும் பேச்சையும் ஒரு சமுதாய மறுமலர்ச்சிக்கான, முற்போக்கான கருத்தியல்களுக்கான களமாக பயன்படுத்தினர்.

நாட்டு விடுதலைக்காக காந்திய இலக்கியம் ஒரு புறமும் பாட்டாளிவர்க்க விடுதலைக்காக இடதுசாரி இலக்கியம் இன்னொருபுறமும் குரல் கொடுத்துக்கொண்டிருந்தபோது சாதிய விடுதலை, மொழி விடுதலை, இன விடுதலை, மொழி விடுதலை, மூடக் கருத்துகள் பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை என பரந்துபட்ட தளங்களிலிருந்து உருவானது தான் திராவிட இலக்கியம்.

இலக்கியத்தை சமூக மாற்றத்திற்கு பயம்படுத்தும் அதன் கருத்தியல் பரப்புரைகள் திராவிட இயக்கத்தின் அரசியல் வழிமுறைகளில் ஒன்றாகவே இருந்திருக்கிறது. துண்டுப்பிரசுரங்கள், சிறு சிறு வெளியீடுகள், படிப்பகங்கள் என திராவிட இயக்கம் வாசிப்பை சமூக சீர்திருத்தத்திற்கான ஒரு வழிமுறையாகவே செயல்படுத்தி வந்திருக்கிறது. அண்ணாவும், கலைஞரும் சமூகத்தின் இறுகிய பழமைவாத எண்ணங்கள்மீது தங்கள் எழுத்துகளை சம்மட்டி அடியாக இறக்கினார்கள். கலைஞர் வாழ்நாள் முழுக்க ஒரு அரசியல் தலைவராக செயல்பட்டதுபோலவே ஒரு முழுமையான எழுத்தாளராகவும் செயல்பட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021ல் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபோது ‘மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சிகள்’ என்ற மாபெரும் இயக்கத்தை தோற்றுவித்தார். அரசின் பெரும் நிதி உதவியுடன் ஆண்டு முழுக்க தமிழ்நாடெங்கும் இந்தக் கண்காட்சிகள் பெரும் அறிவுத் திருவிழாவாகவே நடந்துகொண்டிருக்கின்றன. அத்தோடு தமிழை உலகிற்கும் உலகை தமிழுக்கும் கொண்டுவரும் சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி மற்றொரு அறிவுசார் பேரியக்கமாக நடத்தப்பட்டு வருகிறது. திராவிட மாடல் அரசு படைப்பாளிகளுக்கு வழங்கிவரும் கனவு இல்லமும் பற்பல உயரிய விருதுகளும் தமிழின் படைப்பியக்கத்திற்கு பெரும் உத்வேகம் அளித்துள்ளன.

தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த அறிவியக்கத்திற்கு மேலும் பல புதுமைகளையும் வளமையும் சேர்த்து வருகிறார். இளைஞரணி சார்பில் தொகுதிகள்தோறும் நூலகங்+கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இளைஞரணி சார்பில் செயல்பட்டுவரும் முத்தமிழறிஞர் பதிப்பகம் திராவிட இயக்க சிந்தனைகளையும் சாதனைகளையும் இன்றைய இளைஞர்களுக்குக் கொண்டு சேர்க்கும்விதமாக பல சிறந்த நூல்களைப் பதிப்பித்து வருகிறது. அவற்றின் ஒரு தொடர்ச்சியே இந்த முற்போக்கு புத்தகத் திருவிழா. முன்னோடியான இந்த நிகழ்வின் நோக்கங்கள் மற்றும் பயன்களை நாம் இவ்வாறு தொகுத்துக் காணலாம்,

1. தமிழில் சமூக மாற்றத்திற்கான முற்போக்கு சிந்தனைகளுக்கான ஏராளமான நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றை ஒரு சேரக் காணவும் எந்தெந்த கருத்தியல் மற்றும் இயக்கப் பின்புலங்களில் அந்த நூல்கள் எழுதப்பட்டுள்ளன என அறியவும் இக் கண்காட்சி பயன்படும். அந்த வகையில் இது அரசியல் ஆய்வாளர்களுக்கான ஒரு கண்காட்சி.

2. முற்போக்கு அரசியல் கற்க விரும்பும் வாசகர்கள்மாணவர்களுக்கு இந்தக் கண்காட்சி பெரிதும் வழிகாட்டியாக இருக்கும்.

3. முற்போக்கு அரசியல் இயக்கங்களில் பணிபுரியும் இளைஞர்கள் தங்களுக்கான நூல்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பார்வையிடவும் இக்கண்காட்சியில் மட்டுமல்ல, அதற்குப் பின்னரும்கூட வாங்குவதற்கு இக் கண்காட்சி ஒரு வழிகாட்டியாக அமையும்

4. முற்போக்கு அரசியல் இயக்கங்கள் தங்கள் நூலகங்களுக்குத் தேவையான நூல்களை ஒரே இடத்தில் பார்த்து வாங்க இந்தக் கண்காட்சி வாய்ப்பாக அமையும்

5. முற்போக்கு சிந்தனைகளுக்கான உரைகள் இடம்பெறும் கண்காட்சியாக இருப்பதால் அரசியல் விழிப்புணர்ச்சிக்கான ஒரு திறவுகோலாகவும் இந்தக் கண்காட்சி அமையும்.

இந்தக் கண்காட்சியின் வெற்றி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்ற கண்காட்சிகளை நடத்துவதற்கான உத்வேகத்தை அளிக்கும்.

ஜனநாயக விரோத, பாசிச சக்திகள் தங்களது முழு வலிமையோடு தமிழ்நாட்டின் முற்போக்கு அரசியலை சிதைக்க முயன்று வருகின்றன. பதிப்புத்துறை உள்பட எல்லா ஊடகங்களிலும் அவர்கள் செல்வாக்கு செலுத்த முற்பட்டு வருகின்றனர். இதை முறியடிக்க முற்போக்கு சிந்தனைகளை நாம் வளர்த்தெடுப்பதும் பரவலாகக் கொண்டு சேர்ப்பதும் மிக மிக அவசியம். இது ஒரு இடையறாத பணி, போராட்டம். அந்தப் பணியிடை காலத்திற்கேற்ப பல்வேறு புதுமைகளோடு நாம் கொண்டு சேர்ப்பது மிக மிக அவசியம். அதைத்தான் இந்த முற்போக்கு புத்தகக் கண்காட்சி இலக்காகக் கொண்டுள்ளது.

‘முற்போக்கு’ என்பது ஜனநாயகம், மனித உரிமை, பெண் விடுதலை, மதசார்பின்மை, சாதிய விடுதலை, உழைக்கும் வர்க்கத்தின் விடுதலை, சமூக நீதி, இன உரிமை, மொழி உரிமை, மாநில சுயாட்சி, எழுத்துரிமை, பேச்சுரிமை. இதற்காக எழுதப்பட்ட மகத்தான நூல்கள் இந்தக் கண்காட்சியில் உங்களுக்காக காத்திருக்கின்றன.

அறிவால் இணைவோம். தமிழால் இணைவோம்.



நாமக்கல் மாவட்டம் இராசிபுரத்தில், ரூ.35 கோடி மதிப்பீட்டில் 600 தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மினி டைடல் பூங்கா அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இராசிபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன் ஆகியோர் முன்னிலையில் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

### மரக்காணத்தில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மரக்காணம், நவ. 7 -

துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை கொண்டாட வேண்டும் என மரக்காணம் ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்ற வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி மரக்காணம் கிழக்கு, மத்தியம், மேற்கு ஆகிய ஒன்றிய திமுக மற்றும் மரக்காணம் பேரூர் கழகம் சார்பில் வாக்குச்சாவடிமுகவர்கள், பூத் டிஜிடல் ஏஜன்ட் நிர்வாகிகள்கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் சிறுவாடியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர்கள் தியாகராஜன், குமார், ரவிச்சந்திரன், இளவரசன் ஆகியோர் தலைமையில் மரக்காணம் ஒன்றிய செயலாளர்கள் கிழக்கு தயாளன், மேற்கு பழனி, மத்தியம் ரவிச்சந்திரன், மரக்காணம் பேரூர் ரவிக்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றகூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தி.மு.க. நிர்வாகிகள் அனைவரும் கவனம் செலுத்தி தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர் செய்த சாதனைகளை ஒவ்வொரு வீடாக எடுத்து சொல்லி வாக்குகள் சேகரிக்க வேண்டும் ,செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெறுவதற்கு அனைவரும் கடுமையாக உழைக்கவேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் நேற்று நவம்பர் 4 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளது.

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முன்னெடுப்புடன் வாக்குச்சாவடி முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் நிர்வாகிகள் கவனமுடன் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல்நீக்குதல் பணியை மேற்கொள்ள வேண்டும்.

பீகார் மக்கள் தமிழ்நாட்டில் அவமதிக்கப்படுகிறார்கள் என பீகார் தேர்தல் பிரச்சாரத்தில் தவறாக தெரிவித்துள்ளபிரதமர் மோடிக்கு தமிழ்நாட்டில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்தான் பீகார் உள்ளிட்ட பிற மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வருவதாகும்,

எதிர்வரும் நவம்பர் 27 அன்று பிறந்தநாள் விழா காணும் துணை முதலமைச்சரின்பிறந்தநாளை இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாட வேண்டும்,ஏழை மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில், பாக முகவர்கள், பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் நிர்வாகிகள் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. வானூர் சட்டமன்ற தொகுதி கிளியனூர் கிழக்கு ஒன்றிய BLA2, BDA, BLC, தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் பிரேமா குப்புசாமி, கிளியனூர் K.R.S.ராஜி, VMR.சிவா, பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி, குழந்தைவேலு, முருகையன், குப்புசாமி, பழனி, கோதண்டராமன், அர்ஜுனன், சிவக்குமார், கௌதம், முருகம்.முனுசாமி, சித்தரா செல்வக்குமார் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளைச் செயலாளர்கள், BLA2, BDA, தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கோத்தகிரியில் கூடுதல் பேருந்து வசதி!

நீலகிரி, நவ. 7 –

நீலகிரி மாவட்டம் கோத்த கிரி வட்டம் செம்மனாரை ஆதிவாசி கிராம பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான கூடுதல் பேருந்து நீட்டிப்பு வசதி வேண்டி கடந்த 1.11.2025 அன்று குஞ்சப்பணை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் செம்மனாரை கிராம மக்களின் சார்பாக அளிக்கப்பட்ட மனுவை ஏற்று முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, பொது மக்கள் மற்றும் மாணவ, மாணவியர் நலன் கருதி புதிய மலைப்பகுதி வழித்தட பேருந்து நீட்டிப்பிற்காக தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச் சந்திரன் நேற்று முன்தினம் (5.11.2025) புதிய வழித்தட பேருந்து வசதியை கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

சிறப்பு அழைப்பாளர்களாக நீலகிரி மாவட்ட அவை தலைவர் போஜன்,கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன்,கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.பொ. அரசு
### நவம்பர் 7 (1987)



தி.மு.க. சென்னை மாநகராட்சி மன்றத்தை கைப்பற்றியபோது தி.மு.க.வின் முதல் மேயராக பொறுப்பேற்று பணியாற்றியவர்.

20 ஆண்டுகாலம் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 1967ஆம் ஆண்டு மாதவரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

1958ஆம் ஆண்டு நடைபெற்ற கருப்புக் கொடி போராட்டத்திலும், 1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க., சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியத்தில் அ.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அக்கட்சிகளிலிருந்து விலகி, பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர் எம். மனோகர் தலைமையில் தி.மு.க.வில் இணைந்தனர். கடலூர் கிழக்கு மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி கதிரவன் முன்னிலையில், பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் 100 பேர் தி.மு.க.வில் இணைந்தனர். தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் எம்.ஆர்.கே.பி.கதிரவன், சால்வை அணிவித்து வரவேற்று, வாழ்த்துத் தெரிவித்தார்.